# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 104/பேரூ/2023**
**நாள் : 05.06.2023**

திரு .S. ஜெயசார்லஸ் ஸ்டீபன்
திருநெல்வேலி மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலைபேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம் .... எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பண்டாரகுளம், தெற்கு தெரு, கதவு எண்.3/19 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. ஜெயசார்லஸ் ஸ்டீபன் என்பவரது 21.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2023 அன்று பெறப்பட்டு 104/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பண்டாரகுளம், தெற்கு தெரு, கதவு எண்.3/19 என்ற முகவரியைச் சேர்ந்த திரு .S. ஜெயசார்லஸ் ஸ்டீபன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சியில் 2022–23ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பூங்கா நகர் என்ற 5–வது வார்டு துணைத் தலைவர் வார்டில் ஆள் இல்லாத, குடியிருப்பும் இல்லாதபகுதியில் எந்த ஒரு வருமானமும் இல்லாத காட்டு பகுதியில் ஒரு பாலத்திற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை தலைவர் மற்றும் துணைத் தலைவரும் சேர்ந்தே தன்னிச்சையாக தீர்மானம் போடப்பட்டு அவர்கள் இருவர் மட்டுமே தீர்மான புத்தகத்தில் தீர்மானத்தை எழுதி மற்ற கவுன்சிலர்கள் அனுமதி பெறாமல் இத்தீர்மானத்தை நிறைவேற்றி பணிஉத்தரவும் பிறப்பிக்கப்பட்டு பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வருமானமும் இல்லாத காட்டுப்பகுதியும், ஓடையும் உள்ள

இடத்தில் இப்பாலத்தை கட்டி பஞ்சாயத்து பணத்தை சட்ட விரோதமாக நிதி இழப்பு செய்த செயல் அலுவலர், தலைவர், துணைத் தலைவர் ஆகிய மூவர் மீதும் ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுத்து இனிவரும் காலங்களில் இவ்வித ஊழல் ஏற்படாமல் பாதுகாக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.02.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.03.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாணை (நிலை) எண்,71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.9.2021ல் தெரித்துள்ளபடியும், சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அவசரக் குறிப்பாணையில் அறிவுறுத்தியவாறும் 2021–2022 "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன் ரூ.12.00/– இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா நகரில் சிறுபாலம் அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகளுக்கான மொத்த மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்தில் மூன்றில் ஒரு பங்கு பங்களிப்பு தொகையினை செலுத்த தனிநபரான திரு.எம். ஜான் வின்செண்ட் வள்ளியூர் என்பவர் சம்மதம் தெரிவித்துள்ளார். வள்ளியூர் பேரூராட்சி மன்ற தனிஅலுவலரின் தீர்மானத்தின்படி பணியினை மேற்கொள்ள தீரமானிக்கப்பட்டுள்ளது. பின்னர் சென்னை பேரூராட்சிகளின் ஆணையரின் 4.5.2022 நாளிட்ட கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டு 27.05.2022அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது எனவும் பேரூராட்சியின் தீர்மானத்தின்படி குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அய்யாபிள்ளை என்பவரது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகளின்படி 03.06.2022 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது எனவும் சிறுபாலம் அமைக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ள இடம் உபரிநீர் கால்வாய் செல்லும் இடம் என்பதால் பொதுப்பணித்துறையிடம் தடையில்லாசான்று பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் பூங்கா நகர், எஸ்.கே.பி நகர், ஞானதீபம் நகர் மற்றும் நரிக்குறவர் காலனி ஆகிய இடங்களில் 450 குடியிருப்புகளும் சுமார் 1500 மக்களும் வசித்து வருகின்றனர் என்றும் இப்பகுதி மக்கள் பேருந்து நிலையம் செல்லவும் மருத்துவமனை மற்றும் அத்தியாவசிய தேவைக்கு பொருட்கள் வாங்குவதற்கும்

சுமார் 4 கி.மீ தூரம் சுற்றி மெயின்ரோடு வழியாக செல்ல வேண்டியுள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் வெளி இடங்களுக்கு செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே பூங்கா நகரில் சிறுபாலம் அமைப்பதனால் மேற்படி பொதுமக்கள் 1/2 கி.மீ தூரம் மட்டுமே கடந்து பேருந்து நிலையம் மற்றும் பிறஇடங்களுக்கு சுலபமாக செல்லலாம் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என்றும் தெரிவித்து புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி செயல் அலுவலர், தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகியோர் தன்னிச்சையாக தீர்மானம் போடப்பட்டு செயல்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள புகார் மனு முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும் என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 09.05.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.05.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) 09.05.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. வடக்குவள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார்.

'' வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பூங்கா நகர், S.K.P. நகர், ஞானதீபம் நகர் மற்றும் அதனையொட்டியுள்ள இடங்களில் 450 குடியிருப்புகளும் பொதுமக்கள் சுமார் 1500 பேரும் வசித்து வரும் நிலையில், 2022–23 ஆம் ஆண்டில் "நமக்கு நாமே'' திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்பு தொகை ரூ.4 இலட்சம் மற்றும் அரசு மானியமாக ரூ.8 இலட்சம் என ஆகமொத்தம் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் அமைக்க பேரூராட்சியில் தீர்மானம் (தீர்மான எண்.573 நாள் 13.10.2021) நிறைவேற்றப்பட்டும், மேலும் 04.05.2022 நாளிட்ட பேரூராட்சிகளின் ஆணையரின் செயல்முறை ஆணையின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டும், மேற்கண்ட பாலம் கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. எனவே, மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு செயல் அலுவலர், தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் தன்னிச்சையாக தீர்மானம் போடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது உண்மைக்கு மாறானதாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட பாலம் கட்டியதற்கான பில் தொகை ஒப்பந்ததாரருக்கு இன்னும் அளிக்கப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.''

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 08.05.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

5) 23.05.2023 அன்று மனுதாரர் திரு. S.ஜெயசார்லஸ் ஸ்டீபன் நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட பூங்கா நகர் 5வது வார்டில் குடியிருப்புகள் இல்லாத, ஆட்கள் நடமாடாத காட்டுப் பகுதியின் இடையே பேரூராட்சியால் "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சற்றும் பயன்படாத மேற்கண்ட பாலத்தை கட்டி முடித்து பேரூராட்சி அலுவலர்களால் பேரூராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட பாலத்தை கட்டி முடிக்கும் முன்பே மாவட்ட ஆட்சியரிடமும், பேரூராட்சி உயர் அலுவலர்களிடமும் மனுக்கள் அளிக்கப்பட்டும், மேற்கண்ட மனுக்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தனிப்பட்ட நபர் ஒருவர் அவருடைய மனைப் பிரிவுகளை கருத்தில்கொண்டும், அவரது வசதியை முன்னிட்டும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பங்களித்து பேரூராட்சி அலுவலர்களின் உதவியுடன் மேற்கண்ட பாலத்தை கட்டி முடித்துள்ளனர்.

எனவே எவ்வித வருமானமும் இல்லாத மற்றும் ஓடை உள்ள இடத்தில் மேற்கண்ட பாலத்தை கட்டி முடித்து பேரூராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்திய அனைத்து அலுவலர்கள் மீதும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்."

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், வடக்குவள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை உரிய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints ~other than those involving criminal offences in the following manner. namely:-

xxxxxx xxxxxxxxx xxxxxxxxxx

(d) order other necessary remedial measures considering the facts and circumstances of the case.

அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நேர்வில் மனுதாரர் திரு.S.ஜெயசார்லஸ் ஸ்டீபன் என்பவர் வடக்கு வள்ளியூர் சிறப்புநிலைப் பேரூராட்சியில் 2022–23 ஆம் ஆண்டு நமக்குநாமே திட்டத்தின்கீழ் பூங்கா நகர் என்ற 5வது வார்டில் ஆள் இல்லாத குடியிருப்பும் இல்லாத காட்டுப்பகுதியில் பாலம் கட்டுவதற்கு தன்னிச்சையாக தீர்மானம் போடப்பட்டு பஞ்சாயத்து பணத்தை

சட்டவிரோதமாக நிதிஇழப்பு செய்துள்ள செயல் அலுவலர், தலைவர் மற்றும் துணைத்தலைவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால் வடக்கு வள்ளியூர் சிறப்புநிலைப் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள் 13.09.2021–ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி திரு. M. ஜான்வின்செண்ட் மற்றும் விவசாயிகளிடம் 11.10.2021 நாளிட்ட கோரிக்கை மனு பெறப்பட்டு, 13.10.2021 நாளிட்ட தனி அலுவலரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 4.5.2022 நாளிட்ட கடிதத்தின்வழி பேரூராட்சிகளின் ஆணையரின் அனுமதி பெற்று, 27.05.2022 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 31.05.2022 நாளிட்ட மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் 3.6.2022 பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகளின்படி ஒப்பந்தப் புள்ளி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாக செயல் அலுவலர் தெரிவித்ததை காண முடிகிறது.

"நமக்கு நாமே" திட்டத்தினை செயல்படுத்துப்போது பொதுப்பங்களிப்புத் தொகை வழங்கியவர்/வழங்கியவர்கள் வேலையினை செயல்படுத்தும்போது வேலை செய்யும் இடத்தில் பெயர் பலகை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு அனுமதி பெற்று நிறுவப்பட வேண்டும் என வழிகாட்டுதல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பூங்கா நகர், S.K.P. நகர் 2021–2022 ஞானதீபம் நகர் மற்றும் அதனையொட்டியுள்ள இடங்களில் 450 குடியிருப்புகளும் பொதுமக்கள் சுமார் 1500 பேரும் வசித்து வரும் நிலையில், 2022–23 ஆம் ஆண்டில் "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் பொது பங்களிப்பு தொகை ரூ.4 இலட்சம் மற்றும் அரசு மானியமாக ரூ.8 இலட்சம் என ஆகமொத்தம் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் அமைக்க பேரூராட்சியில் தீர்மானம் (தீர்மான எண்.573 நாள் 13.10.2021) நிறைவேற்றப்பட்டும், மேலும் 04.05.2022 நாளிட்ட பேரூராட்சிகளின் ஆணையரின் செயல்முறை ஆணையின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டும், மேற்கண்ட பாலம் கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ள நிலையில் மனுதாரரிடமிருந்து பயன்பாடற்ற இடத்தில் பாலம் கட்டியுள்ளதாக புகார் இம்முறைமன்ற நடுவத்தில் வரப்பெற்றுள்ள நிலையில் வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி சார்பில் இந்த பாலத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகளையும் பலன்களையும் அருகாமையில் உள்ள குடியிருப்பு பகுதிகளின் புகைப்படத்தை இம்முறைமன்றத்தில் அளிக்காதது கண்டிக்கத்தக்கது. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இனி வருங்காலங்களில் திட்டங்களை செயல்படுத்துவதற்கு முன் தேர்ந்தெடுக்கப்படும் பணி/முழு பயன்பாட்டுடன் இடம் குறித்து பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் நேரடி களஆய்வு செய்தும், தேவையை அறியும் பொருட்டு பொதுமக்களின் கருத்தினை பெற்றும் நமக்கு நாமே திட்டத்தினை செயல்படுத்துவதால் எதிர்காலத்தில் இது போன்ற புகார் எழுவதை தவிர்க்க முடியும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே எதிர்காலத்தில் மேற்படி திட்டத்தினை

புகாரின்றி செயல்படுத்திடவும் அனைத்து பொதுமக்களுக்கும் திட்டத்தின் பயன் கிடைத்திடவும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஜூன் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ஜெயசார்லஸ் ஸ்டீபன்,
8/19, தெற்கு தெரு, பண்டாரகுளம்,
அச்சம்பாடு அஞ்சல், வள்ளியூர்,
இராதாபுரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்

2) செயல் அலுவலர்,
வடக்குவள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி
திருநெல்வேலி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.